2003 ஏப்ரல் 11]

அவர்கள் கூறியிருக்கின்றார்கள். இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நல்லாட்சி நடத்திக்கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில், மதுரை மாவட்டம் மிகவும் வறட்சியான மாவட்டம். அதுவும், உசிலம்பட்டித் தொகுதி, என்னுடைய மேலூர் தொகுதி, பேரவைத் தலைவர் அவர்களுடைய திருமங்கலம் தொகுதி எல்லாம் ஏழை கூலித் தொழிலாளர்கள் வசிக்கின்ற தொகுதிகள். அவர்கள் கூலி வேலைக்குப் போகின்றபோது தங்களுடைய குழந்தைகளை அந்த ஊட்டச்சத்து மையத்திலேதான் விட்டுவிட்டுச் செல்ல வேண்டும். ஆகையால் நிறைய இடங்களிலே புதிதாக ஊட்டச்சத்து மையங்கள் அமைப்பதற்கு-மதுரை மாவட்டத்தில் இந்த 3 தொகுதிகளிலும் புதிய ஊட்டச்சத்து மையங்கள் அமைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நானும் மதுரை மாவட்டத்திலேயிருந்து வந்தவள்தான். ஆகவே அந்த மாவட்டத்தைப்பற்றி எனக்கும் தெரியும் என்கிற காரணத்தால் நிச்சயமாக அதிகமான ஊட்டச்சத்து மையங்களைத் தொடங்குவதற்கு அரசு தகுந்த நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 252, திரு. எஸ். தாமோதரன், இருக்கையில் இல்லை.

வினா எண் 253, திரு. கு. அண்ணாமலை, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

253—

பேருந்து வசதி

***7012—திரு. கு. அண்ணாமலை:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கீழப்பாவூர் ஒன்றியம், மேலகிருஷ்ணப்பேரி ஊராட்சி, முத்துகிருஷ்ணப்பேரியிலிருந்து கழுநீர்குளம், மேலப்பட்டமுடையார்புரம், நாகன்குளம், அருணாப்பேரி வழியாக தென்காசி செல்ல பேருந்து வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கீழப்பாவூர் ஒன்றியம், மேலகிருஷ்ணப்பேரி ஊராட்சி, முத்துகிருஷ்ணப்பேரியிலிருந்து கழுநீர்குளம், மேலப்பட்டமுடையார்புரம், நாகல்குளம், அருணாப்பேரி வழியாக தென்காசி செல்ல பொதுமக்களின் தேவைக்கேற்ப ஏற்கெனவே பகுதி பகுதியான பேருந்து வசதி உள்ளதால், கோரிக்கைத் தடத்தில் புதிதாக பேருந்து வழித்தடம் ஏற்படுத்த வேண்டிய செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கு. அண்ணாமலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழப்பாவூர் ஒன்றியம், மேலப்பாவூர், மேலகிருஷ்ணப்பேரி ஊராட்சி, முத்துகிருஷ்ணப்பேரியிலிருந்து கழுநீர்குளம், மேலப்பட்டமுடையார்புரம் வழியாக தென்காசிக்கு பேருந்து மிகவும் அவசியமாகிறது. பொதுமக்களின் நலனைக் கருத்தில்கொண்டு, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் மறுபரிசீலனை செய்து இவ்வழித் தடத்தில் பேருந்து உடனடியாக இயக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இந்த மேலப்பட்டமுடையார்புரம், நாகல்குளம், அருணாப்பேரி ஆகியவை திருநெல்வேலி—அத்தியூத்து-சுரண்டை மற்றும் திருநெல்வேலி-அத்தியூத்து-தென்காசி ஆகிய இரு பிரதான சாலைகளுக்கிடையே உட்புறமாக அமைந்துள்ள குக்கிராமங்கள் ஆகும். மிகக் குறைந்த வீடுகளும், மிகக் குறைந்த மக்கள்தொகையையும் கொண்ட இக்குக்கிராமங்களுக்கு திருநெல்வேலி-தென்காசி பிரதான சாலையிலுள்ள பாவூர்சத்திரத்துடன் தொடர்புபடுத்தி ஏற்கெனவே இரு தனியார் சிற்றுந்துகள் வாயிலாக 30 சுற்றுக்கள் இயக்கப்பட்டு வருகின்றன. அதேபோல, அந்தப் பகுதியிலே ஏற்கெனவே மாண்புமிகு நமது உறுப்பினர் அண்ணாமலை அவர்கள் அடைக்கலம்பட்டினம் என்ற இடத்தில் L.S.S.. பேருந்துகளை எல்லாம் நிறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, அந்தச் சாலையிலே அடைக்கலம்பட்டினம் கிராமத்தில் அனைத்து L.S.S. பேருந்துகளும் நின்று செல்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எனவே அந்தப் பகுதி மக்கள் L.S.S. பேருந்துகளையும் பயன்படுத்தி பயனடையலாம். மேலும், இந்தச் சிற்றுந்துகளின் மூலமாக 30 சுற்றுக்கள் இயக்கப்படுவதால் அந்த வசதியையும் அந்தப் பகுதி மக்கள்

2003 ஏப்ரல் 11]

பெற்றுக்கொள்ளலாம். எனவே, மேலப்பட்டமுடையார்புரம், நாகல்குளம், அருணாப்பேரி ஆகிய கிராமங்கள் போக்குவரத்து வசதியைப் பெறுவதற்கு ஏற்கெனவே இருக்கிற L.S.S. பேருந்துகளை நிறுத்துவதன் மூலமாகவும் சிற்றுந்துகள் மூலமாகவும் போதிய வசதிகள் செய்யப்பட்டுள்ளதால் இந்த வசதியே போதுமானது என்று கருதி, புதியதாக அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் மூலமாக புதிய பேருந்துகள் விடுவதற்கு வாய்ப்பில்லை என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-50

திரு. கு. அண்ணாமலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழப்பாவூர் ஒன்றியம், மேலகிருஷ்ணப்பேரி, முத்துகிருஷ்ணப்பேரி, கழுநீர்குளம், மேலப்பட்டமுடையார்புரம், நாகல்குளம், அருணாப்பேரி ஆகிய கிராமத்தைச் சேர்ந்த மக்கள், திருநெல்வேலி அல்லது தென்காசி செல்ல வேண்டுமென்றால், சுமார் 8 கிலோ மீட்டர் தூரம் உள்ள ஆலங்குளத்திற்கோ அல்லது பாவூர்சத்திரத்திற்கோ சென்று பஸ் ஏற வேண்டிய சூழ்நிலை இருந்தது. இப்போது அம்மா அவர்களின் அரசு அடைக்கலப்பட்டினத்தில் L.S.S. பஸ்களை நின்று செல்ல உத்தரவிட்டுள்ளதால் இந்தக் கிராமத்து மக்கள் போதிய பஸ் வசதி பெற்றுள்ளார்கள். ஆகவே இந்தக் கிராமத்து மக்கள் சார்பாகவும், என் சார்பாகவும் இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பி.ஜி. இராஜேந்திரன்.

திரு. பி.ஜி. இராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் ஆட்சியில் தென்காசியிலிருந்து தடம் எண் 7 அம்மாப்பேரி, பட்டமுடையார்புரம், நாகல்குளம், அருணாப்பேரி வழியாக ஜி.கே. புதூர் வந்துகொண்டிருந்தது. அந்தப் பேருந்து தி.மு.க. ஆட்சியில் நிறுத்தப்பட்டுவிட்டது. இந்தக் கிராமப்புறங்களில் சுமார் 7,000 மக்கள் தொகைக்கு மேல் வசித்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள், தென்காசி, திருநெல்வேலி செல்ல வேண்டுமென்றால் சுமார் 8, 9 கிலோ மீட்டர் தூரம் வந்துதான் பஸ் ஏற வேண்டும். இந்தப் பேருந்து ஜி.கே. புதூரிலிருந்து கழுநீர்குளம், மேலபட்டமுடையார்புரம், நாகல்குளம், அருணாப்பேரி வழியாக தென்காசி செல்லும் பேருந்து. ஆகவே மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் அரசு அந்தப் பேருந்தை மீண்டும் இயக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[2003 ஏப்ரல் 11

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட வழித்தடங்களில் 2 தனியார் சிற்றுந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. அதோடு மட்டுமல்லாமல், தி.மு.க. ஆட்சிக் காலத்திலே ஓடிக்கொண்டிருந்த பேருந்து நிறுத்தப்பட்டது என்று சொன்னார்கள். அப்படியானால், அந்த விவரங்களை அவர் தெரிவிப்பாரேயானால், அதுகுறித்து மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மு. அப்பாவு.

திரு. மு. அப்பாவு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலிக்கும் நாகர்கோவிலுக்கும் இடையே Point -to-Point என்ற பேருந்து இயக்கப்பட்டு வந்தது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தனிக் கேள்வி போடவும்.

வினா எண் 254, திரு. சி. ஞானசேகரன் மற்றும் திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி, இருக்கையில் இல்லை.

வினா எண் 255, திருமதி வி. சிவகாமி, மாண்புமிகு மின் மற்றும் தொழில் துறை அமைச்சர்.

255—

ஆற்று மணல்

• 8067—திருமதி வி. சிவகாமி: மாண்புமிகு மின் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாராபுரம் தொகுதி, அமராவதி ஆற்றுப்படுகைகளிலிருந்து ஆற்று மணல் அனுமதியின்றிக் கடத்தப்படுவதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?